பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 11 ஞாயிற்றுக்கிழமை 25.05.2025 கதிர் 197

## இனி அது ரகசியம் அல்ல!

திசைகாட்டிக்குள் பிரதமர் ஹரினிக்கும்தீவிரஜேவிபியினருக்கும் இடையில்ஒருபின்போர்இருப்பதான கருத்துநீண்டநாள்களாகவே இருந்துவருகின்றது. ஆனால் ☞2

# உகந்தமலையில் புதிதாக முளைத்த புத்தர் சிலையும் பௌத்த கொடியும்

### அதிர்ச்சியடைந்த இந்துக்கள் கோடீஸ்வரன் எம்.பியிடம் முறைப்பாடு

(சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீமுருகன் ஆலய கடற்கரைச்சூழலில் உள்ளமலையொன்றில் புத்தர்சிலை ஒன்று நிறுவப்பட்டு உள்ளது. அதனோடு ஒட்டியதாக பௌத்த கொடியும் பறக்கவிடப்பட்டுள்ளது.

வருடாந்தம் ☞2





## குறைந்தபட்ச மாத சம்பளம் ரூ. 27 ஆயிரமாக நிர்ணயம்

நாட்டிலுள்ள ஊழியர்களின் குறைந்தபட்ச தேசிய மாதாந்த ஊதியம் 27ஆயிரம் ரூபாவாகவும் தேசிய நாளாந்த ஊதியம் 1800ரூபாவாகவும் வரையறுக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊதியத்தொகையானது ஏப்ரல் ☞2

## மாகாணத் தேர்தலுக்கான தனிநபர் திருத்த சட்டமூலம் வர்த்தமானியில்

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்குஏதுவாகதனிநபர்சட்டமூலமொன்றை சமர்ப்பிப்பதற்குதீர்மானிக்கப்பட்டுவர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ☞8

## தேர்தல் செலவின விவரங்கள் வழங்க மே 27 கடைசி நாள்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், வேட்பாளர்களைப்பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் 2023ஆம்ஆண்டின்3ஆம்இலக்க ☞8

# காணி அரசுடமையாக்கலை எதிர்த்துச் சட்டப் போராட்டம்

## தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

## அதற்காக இன்று வெற்றிலைக்கேணியில் பாதிக்கப்பட்டோருக்கு இலவச சட்ட ஆலோசனை

வடக்கில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணியை அரசுடமையாக்கும் திட்டத்துடன் ஆளும்தரப்பு முன்னெடுத்துள்ள பணிகளைத் தடுத்துநிறுத்தும்நோக்கில்அதனை சட்டரீதியாக எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகளைத் தமிழ் அரசுக் கட்சி மேற்கொண்டுள்ளது. இதன் முதற்கட்டமைகா ஆளும்தரப்பின் நடவடிக்கையால்பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கான முதலாவது இலவச அமர்வு இன்று காலை 9 மணி முதல் வெற்றிலைக்கேணி ரம்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் என்று கட்சியின் செயலாளர் நாயகம் சுமந்திரன் அறிவித்துள்ளார். ☞2

## அரச திணைக்களங்களில் இலஞ்ச, ஊழல் மிக மோசம்

### ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

நாட்டின்பலஅரசதிணைக்களங்களில் இலஞ்சமும்ஊழலும்தலைவிரித்தாடுவதாக எமக்குதகவல்கள்கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே இந்த விடயத்தில் நாம் மிகுந்த அவதானத்துடன் இருக்கிறோம். இலஞ்சம் கொடுப்பதும் அதனைப் பெற்றுக்கொள்வதும் பெரும் தவறு என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டுமென இலஞ்சஊழல்விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமும் மேல் நீதிமன்ற நீதிபதியுமான ரங்க திசாநாயக்க தெரிவித்தார். ☞8

## போலிக் குற்றச்சாட்டுக்களால் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது

### பிரதி அமைச்சர் எரங்க எடுத்துரைப்பு

கொழும்பு மாநகர சபையை யார் கைப்பற்றுவது என்பது இன்னும் ஒரு வாரத்தில் நாட்டு மக்கள் தெரிந்துக்கொள்ளலாம். ஆளும்தரப்பின் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஆட்சியை வீழ்த்த முடியாது என்பதை எதிர்க்கட்சியினர் வெகுவிரைவில் விளங்கிக் கொள்வார்கள் என்றுவிளையாட்டுத்துறை பிரதிஅமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் ☞8

## அடுத்தாண்டே இந்த ஆட்சியாளர்கள் மக்களால் துரத்தியடிக்கப்படுவார்கள்

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. எதிர்வுகூறல்

இந்த ஆளும் தரப்பால் இலங்கையை நிர்வகிக்க முடியாது என்று அரச அதிகாரிகளும் நிறுவனத் தலைவர்களும்துறைசார்நிபுணர்களும்குறிப்பிடுகின்றனர். அடுத்த ஆண்டு இந்த நாளில் நாட்டு மக்களால் இவர்கள் ஆட்சியிலிருந்து துரத்தியடிக்கப்படுவார்கள் என்று ஐக்கிய மக்கள்சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று நடந்த கலந்துரையாடலொன்றில் பங்கேற்றதன்பின்னர்செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின்பயணம்சிறப்பானதாக இல்லை என தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களே கூறுகின்றனர். நாட்டில் ஆளும்தரப்பென்ற ஒன்று இருக்கிறதா என்பதே தெரியவில்லை. மக்களின் பிரச்சினைகளுக்கு இந்த ஆளும்தரப்பிடம் எந்தத் தீர்வும் இல்லை. கொள்ளையற்ற, அனுபவமற்ற இந்தக் குழுவிடம் நாட்டைகையளித்தால் ☞2

## அடுத்தடுத்துப் பதவி விலகும் ஐ.ம.ச. கட்சி முக்கியஸ்தர்கள்

ஐக்கிய மக்கள் சக்தியில் தொடர்ந்தும்பலஉறுப்பினர்கள் பதவிகளிலிருந்து விலகி வருகின்றனர். அந்தவகையில் நேற்று கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் ரஞ்சித் அலுவிஹாரேபதவியிலிருந்து விலகுவதாகஅறிவித்துள்ளார். தனது பதவி விலகல் கடிதத்தை கட்சி தலைவர் சஜித்பிரேமதாசவுக்குஅனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தனது பதவி விலகலுக்கான காரணத்தை குறிப்பிட்டுள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார். கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சில அதிருப்தியான சூழலே அவர் பதவி விலகக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் தான் ஊடகங்களுக்கு ☞8

## வரி விதிப்பு குறித்து பேச்சு நடத்த தூதுக்குழு வாஷிங்டன் செல்லும்

அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்தின் அழைப்பின் பேரில் வாஷிங்டனில் நடைபெறும் வரி விதிப்பு தொடர்பான கலந்துரையாடல்களில் இலங்கை தூதுக்குழு பங்கேற்கவுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை நோக்கமாகக் கொள்வதற்கான இரண்டாவது நேரடி சந்திப்பு இதுவாகும்.

அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகம் மற்றும் இலங்கையின் தொடர்புடைய அதிகாரிகளுக்கு இடையில் நடைபெற்ற பல கட்ட ☞8

## இனி இது .....

இதனை ஹரினி வெளிப்படையாக மறுத்து வந்திருக்கிறார். இதுபோன்ற கதைகள் எதிர்க் கட்சிகளால் கிளப்பி விடப்படுபவை என்று தெரிவிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

ஆனால், இந்தப் பனிப்போர் இப்போது இன்னும் விரிவாகி, மோசமாகி இருக்கின்றது என்று சிங்கள இணைய ஊடகம் ஒன்று தெரிவித்திருக்கின்றது. அந்த ஊடகத்தின் மூத்த, புகழ்பெற்ற பத்தி எழுத்தாளர் ஒருவர் தனது பத்தியில் ஹரினிக்கும் ஜேவிபிக்கும் இடையிலான மோதல் தீவிரம் பெற்றிருப்பதன் காரணமாகவே ஹரினி இந்த உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் திசைகாட்டிக்கு ஆதரவு தேடிப் பணியாற்றவில்லை என்று தெரிவிக்கிறார். ஹரினியின் இந்த நிலைப்பாடு திசைக்காட்டிக்குள் மேலும் விரிசலை ஏற்படுத்தியிருக்கின்றது என்றும் ஹரினியை பிரதமர் பதவியிலிருந்து தூக்கவேண்டும் என்றும் அவர்களில் ஒரு பகுதியினர் வலியுறுத்துகின்ற அளவிற்கு இந்த விரிசல் வளர்ந்துள்ளது என்றும் அவர் கூ-றுகின்றார்.

“கொழும்பு நடுத்தர வர்க்கமோ, நகர்ப்புற வர்க்கமோ, உயர் வர்க்கமோ ஜேவிபிக்கு ஒருபோதும் வாக்களிக்கவில்லை. ஆனால் திசைகாட்டி மூலம் கொழும்புக்கு வந்த ஹரினி தான் ஜேவிபிக்கு இதையெல்லாம் மாற்றினார். ஹரினி கொழும்புக்கு வந்த பிறகு, ஜேவிபி அவர் மூலம் அதிக அதிகாரத்தைப் பெற்றது. கொழும்பில் படித்த, நடுத்தர வர்க்கம் மற்றும் உயர் வர்க்கத்தை அவர் பிரதிநிதித்துவப்படுத்தினார். இந்த இரண்டு வகுப்புகளும் ஐ.தே.க.வுக்கு வாக்களித்து வந்தாலும், ஹரினியின் வருகையுடன், அந்த வாக்குகள் அனைத்தும் ஹரினியைச் சுற்றி வரத் தொடங்கின. ஹரினியின் தோற்றத்தால் ஐ.தே.க.விலிருந்தும், எஸ்.ஜே.பி.யிலிருந்தும் பிரிந்து சென்ற ஏராளமான மக்கள் ஹரினிக்கு வாக்களித்தனர். இதனால்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், கடந்த பொதுத் தேர்தலிலும் திசைகாட்டி கொழும்பில் மிகப்பெரிய வெற்றியைப் பெற முடிந்தது.

ஆனால் இன்று, ஹரினி கொழும்பு தேர்தல் பிரச்சாரத்தில் இருந்து விலகி இருந்ததால் திசைகாட்டி அதிக எண்ணிக்கையிலான வாக்குகளை இழந்துள்ளதாக ஜேவிபிக்குள் புகைச்சல் கிளம்பியுள்ளது. இதனாலேயே கொழும்பு மாநகர சபையை ஆளும்தரப்பால் முழுமையாகக் கைப்பற்ற முடியாமல் போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹரினி கடந்த காலத்தைப் போலவே கொழும்புக்குத் தேவையான அரசியல் பலத்தை வழங்கியிருந்தால், திசைகாட்டி கொழும்பு மாநகர சபையை எப்படியும் கைப்பற்றியிருக்க முடியும் நிறுவியிருக்க முடியும் என்று ஜே.வி.பி-யில் சிலர் கருதுகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுடன், இதுவரை சாம்பலுக்கு அடியில் கனன்றுவந்த நெருப்பு வெளிப்படையாக எரியத் தொடங்கும் நிலைக்கு வந்திருக்கிறது. திசைகாட்டிக்கும் ஜே.வி.பி-க்கும் இடையிலான மோதலின் தீப்பொறிகள் பறக்க ஆரம்பித்திருக்கின்றன.

கூடுதலாக, பல கட்சிகள், குறிப்பாக திசைகாட்டியை ஆதரிக்கும் சமூக ஊடக ஆர்வலர்கள் மற்றும் யூ ரியூப் பத்திரிகையாளர்கள், இந்தச் சரிவுடன் உடனடியாக அமைச்சரவை மறுசீரமைப்பு கொண்டு வரப்படவேண்டும் என்று கூறி வருகின்றனர். பிரதமர் பதவியும் அதே நேரத்தில் மாறவேண்டும் என்று அவர்கள் பல்வேறு இடங்களில் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர். மேலும், திசைகாட்டி ஆளும்தரப்புக்குள் உள்ள சிலர் மற்றும் சமூக ஊடகங்களில், ஹரினி, சில அரசியல் முகாம்களில் உள்ள பல்வேறு கட்சிகளுடன் தேவையற்ற ஒரு சிறப்பு மோதலைத் தொடங்கியுள்ளார் என ஜேவிபிக்குள் ஒரு சந்தேகம் கிளம்பியிருப்பதாகத் தற்போது பகுப்பாய்வு செய்து வருகின்றனர்.

அதுபோக, ஹரினி உயர்கல்வி பெற்ற அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் தற்போது அவர் மீது சிறப்பு ஆர்வம் காட்டி வருகின்றன. இந்த சூழ்நிலையும் திசைகாட்டிக்குள் ஹரினி குறித்து எழுப்பப்பட்ட சந்தேகங்களுக்கு பங்களித்துள்ளது.

இப்படி அந்தப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆளும்தரப்புக்கு வெளியிருந்து வலுத்து வரும் சவால்களுக்கு மத்தியில் உள்ளேயும் பல சவால்கள் காத்திருக்கின்றன என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. ஆட்சியைப் பிடிக்கும் வரைக்கும் தம்மை நல்லவர்களாக அடையாளப்படுத்திக்கொண்ட ஜேவிபியினர் தற்போது வேசத்தைக் கலைத்து வருவதே இதற்கான காரணம் என்று அந்தக் கட்சியைப் பற்றி நன்கு அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## காணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் உள்ள கரையோரக் காணிகளை அரசுடமையாக்கும் நோக்கத்துடன் 28/03/2025 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானியை இரத்துச் செய்வது தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய கூட்டத்தில், வர்த்தமானியை மே 28க்கு முன்னதாக இரத்துச் செய்வதற்கான எந்த முடிவும் எடுக்கப்படாததன் விளைவாக இந்தச் சட்டப் போராட்டத்திற்கு தமிழ் அரசுக் கட்சி தயாராகியுள்ளது.

இதனடிப்படையில் இன்று ஞாயிற்றுக் கிழமை நில உரிமையாளர்களைச் சந்தித்து சட்ட நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யவுள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்தார்.

“2025 மார்ச் 28 வெளியிடப்பட்ட வடக்கு மாகாணத்தில் வவுனியா தவிர்ந்த நான்கு மாவட்டங்களிலும் 5,940 ஏக்கர் காணியை அரச காணியாக சுவீகரிக்கும் அரசின் வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக நாம் தொடர்ந்து ஆட்சேபனைகளைத் தெரிவித்திருந்தோம்.

மூன்று மாத காலத்தில் மக்கள் தமது காணிகளுக்கான ஆவணங்களைச் சமர்ப்பித்து உரித்தை உறுதிப்படுத்தவேண்டும் என்ற அந்த நிலைப்பாட்டை அரசு மீளப் பெற வேண்டும் என வலியுறுத்தினோம். இல்லையேல் ஆளும்தரப்-புக்கு எதிராகப் அறவழியில் போராட்டங்கள் இடம்பெறும் என்றும் தெரிவித்திருந்தோம்.

இவ்வாறான நிலையில் அரசு காணி அமைச்சின் மூலம் இந்த வர்த்தமானி அறிவித்தல் மீதான மேலதிக நடவடிக்கைகள் நிறுத்தப்படுகின்றன என்று ஒரு கடிதம் வெளியிட்டபோதும் அது சட்ட வலுவற்றதாகவே பார்க்கப்படும்.

பிரதமர் வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தபோதும் ஓர் உறுதியான பதிலையோ அல்லது வர்த்தமானியை இரத்துச் செய்யும் நம்பிக்கையையோ வழங்காதமையால் நாம் அடுத்தகட்ட நடவடிக்கைக்குத் தயாராகவுள்ளோம்.

இதன் முதல்கட்டமாக 4 மாவட்டங்களிலும் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களின் நில உரித்தாளர்களுக்குத் தேவையான இலவச சட்ட உதவிகளை வழங்கி நீதிமன்றங்களில் அவர்களின் சார்பில் வழக்குகள் தாக்கல் செய்யவுள்ளோம். பாதிக்கப்பட்ட இடங்களுக்கே சட்டத்தரணிகள் குழாம் நேரில் வருகை தந்து வேண்டிய உதவிகளை வழங்கும்.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வெற்றிலைக்கேணி ரம்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்தச் சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனால் அந்தப் பகுதி மக்கள் இதில் பங்குகொள்ளலாம்.

இதேநேரம் ஏனைய மாவட்டங்களில் இடம்பெறும் பணிகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும்“ என்று சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

## உகந்தமலையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முருகப் பெருமான் தீர்த்தமாடுகின்ற கடற்கரைச் சூழலில் கடற்படை முகாமுக்கு அருகே உள்ள மலையில் குறித்த புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அதன் மேலாக பௌத்த கொடியும் பறக்க விடப்பட்டுள்ளது.

உகந்தமலையில் நாங்கள் முருகன் சிலையொன்றை நிறுவ முற்பட்டபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், அதே சூழலில் இப் புத்தர் சிலை எவ்வாறு நிறுவப்பட்டது? என்று மக்கள் கோருகின்றனர். கதிர்காமம் போல் உகந்தையையும் மாற்ற திட்டமிட்ட சதி நடக்கிறதா? என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

இந்த விடயம் தொடர்பாக இந்துக்கள் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரனின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

பிரபல சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித்திடமும் மக்கள் முறையிட்டுள்ளனர்.

உகந்தமலையில் வள்ளியம்மன் மலையில் கடந்த காலத்தில் முருகன் சிலை அமைப்பதற்கு முன்னாள் கிழக்கு ஆளுநர் அமைச்சர்கள் முதல் ஆலய நிர்வாகத்தினர் முயற்சி செய்தபோது அதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தடை செய்ததாக சொல்லப்படுகிறது.

இந்த நிலையில், அதே சூழலில் உள்ள மற்றுமொரு மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டிருப்பது குறித்து இந்துக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இன, மத பேதம் பாராட்டாத இன்றைய ஆளும்தரப்பின் கவனத்திற்கு இதனை கொண்டு வருகிறோம். உரிய நீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்துக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குறைந்தபட்ச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 வரையில் அமுலாகுமெனவும் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டின் மூன்றாம் இலக்க தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் பிரிவு 3 இன் திருத்தத்தைத் தொடர்ந்து குறித்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களின் குறைந்தபட்ச மாதாந்த ஊதியம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திருத்தப்பட்ட சட்டப்பிரிவுக்கு அமைவாகஇ 2025ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 2025 டிசெம்பர் 31 வரையில் தேசிய குறைந்தபட்ச மாதாந்த ஊதியத்தை 9,500 ரூபாவாலும் தேசிய குறைந்தபட்ச நாளாந்த ஊதியத்தை 380 ரூபாவாலும் மேலும் அதிகரிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த வர்த்தமானியில் 2026 ஜனவரி முதலாம் திகி முதல் தேசிய குறைந்தபட்ச மாதாந்த ஊதியத்தை 3,000 ரூபாவாலும் தேசிய குறைந்தபட்ச தினசரி ஊதியத்தை 120 ரூபாவாலும் அதிகரிக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2026ஆம் ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் எந்தவொரு தொழில் அல்லது சேவையிலும் உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் தேசிய குறைந்தபட்ச மாத ஊதியம் 30,000 ஆகவும், தேசிய குறைந்தபட்ச தினசரி ஊதியம் ரூ. 1,200 ரூபாவாகவும் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடுத்தாண்டே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னவாகும் என்பதை அன்றே நாம் தெரிவித்திருந்தோம்.

இன்று தேசிய மக்கள் சக்தி 23 இலட்சம் வாக்குகளை இழந்திருக்கிறது. நாம் மேலதிகமாக 3 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கின்றோம். இந்த ஆளும்தரப்பால் இலங்கையை நிர்வகிக்க முடியாது என அரச அதிகாரிகளும் நிறுவனத்தலைவர்களும் துறைசார் நிபுணர்களும் குறிப்பிடுகின்றனர். அடுத்த ஆண்டு இந்த நாளில் நாட்டு மக்களால் இவர்கள் ஆட்சியிலிருந்து துரத்தியடிக்கப்படுவார்கள்.

சுயேச்சை குழுக்களுடன் ஒப்பந்தமிட்டு கொழும்பு மாநகரசபையில் ஆளும்தரப்பு ஆட்சியமைத்து, தோல்வியடைந்த அந்தப் பெண் வேட்பாளரிடம் கொழும்பு ஒப்படைக்கப்பட்டால் அடுத்த ஆண்டு மே மாதத்துக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இந்த ஆளும்தரப்பின் வீழ்ச்சி ஆரம்பமாகும். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த ஆதரவாளர்களாலேயே இந்த ஆளும்தரப்பு வீழ்த்தப்படும்.

மக்களுக்கு உப்பினைக்கூட வழங்க முடியாதுள்ள ஆளும்தரப்பு ஏனைய காரணிகள் குறித்துப் என்ன பயன்? எதிர்க்கட்சிகளுக்கு பாதாள உலகக் குழுவினருடன் தொடர்பிருக்கிறது என்றால் ஆதரத்துடன் அதனை நிரூபித்து சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யுமாறு சவால் விடுக்கின்றேன். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்களே நாடு தொடர்பில் தீர்வொன்றை எடுக்கவேண்டும். அந்த பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கின்றோம் என்றார்.



# வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 10,000 ஏக்கர் காணி வனப் பகுதியாக பிரகடனப்படுத்தப்படவுள்ளதா?

## பிரதமருடனான கூட்டத்தில் சத்தியலிங்கம் எம்.பி கேள்வி

எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி அனுஸ்டிக்கப்படவுள்ள சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 10,000 ஏக்கர் காணி வனப்பகுதியாக பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கு - கிழக்கு காணி பிணக்குகள் தொடர்பான கூட்டமொன்று பிரதமர் ஹரினி அமரசூரிய தலைமையில் வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. இந்த விசேட கூட்டத்தில் விவசாய அமைச்சர் லால்காந்த, சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயரதிகாரிகள் மற்றும் வடக்கு கிழக்கை பிரதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இதன்போது அண்மையில் வெளியிடப்பட்ட காணிசுவீகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் -

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியால் வவுனியா மாவட்டத்தில் உள்ள வனப் பிரதேசத்தை பாதுகாப்பதற்காக அவ்வனத்தை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக அறிய முடிகின்றது. இதற்காக வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 10,000 ஏக்கர் காணி வனப்பகுதியாக பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக அறிகின்றோம்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் பெருமளவிலான பொதுமக்களிற்கு சொந்தமான காணிகள் உள்வாங்கப்பட்டிருந்தது. அவை இடம்பெயர்வுக்கு முன்பு மக்கள் குடியிருந்த மற்றும் அவர்களது பயன்பாட்டில் இருந்த காணிகளாகும். எனவே வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் பொதுமக்களின் பாவனையிலிருந்த காணிகளை அடையாளங் கண்டு அவற்றினை முற்றாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், வவுனியா மாவட்டம் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் மாணிக்கம் பண்ணைப்பகுதியில் (மெனிக்பாம்) 2009 இறுதி யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டு தங்கவைக்கப்பட்டார்கள். 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் படிப்படியாக மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டு அங்கிருந்த மக்கள் முற்றாக வெளியேறிய நிலையில் கடந்த 15 வருடங்களாக இராணுவத்தினர் அந்தக்காணிகளை சுற்றி வேலிகள் அமைத்து பொதுமக்கள் உட் செல்வதற்கு தடை விதித்துள்ளதுடன் அங்கு விவசாயப் பண்ணை அமைத்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். உண்மையில் இந்தக்காணிகள் பொதுமக்களுக்கு சொந்தமானவை. அவை பலதரப்பட்ட காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள காணிகளாகும்.

எனவே மேற்படி காணிகளை விடுவித்து காணி உரிமையாளர்களிடம் மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.





வவுனியா நகரப்பகுதியில் மக்களுக்கு குடியிருப்பு தேவைக்காக 50 வருடங்களுக்கு முன்னர் காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. 50 வருடங்கள் கடந்துள்ள நிலையில் தற்போது மேற்படி காணிகளுக்கான உறுதி வழங்குவதற்கான வேலைகள் நடைபெறுகின்றன. காணி உறுதிக்கு விண்ணப்பிக்கும் போது நகர எல்லைக்குள் தலா 02 பரப்பு காணிக்கே குடியிருப்பதற்கான காணி உறுதி வழங்கலாமெனவும் மீதமுள்ள காணிக்கு விவசாய மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கான காணி உறுதியே வழங்கமுடியும் என்று கூறப்படுகின்றது. எனவே மேற்படி குடியிருப்பு தேவைக்காக வழங்கப்பட்ட காணி முழுவதிற்குமான உறுதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

100

# வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சீருடை, ரவைகள் வவுனியாவில் மீட்பு

## அதிரடிபடை சிப்பாய் உட்பட இருவர் கைது



வவுனியா போகஸ்வெள சலினிகம கிராமத்தில் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் சீருடைகளுடன் வியாழக்கிழமை மாலை இருவர் கைது செய்யப்பட்டனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, அந்த பகுதியில் அமைந்துள்ள வீடொன்றை பொலிஸார் சோதனை செய்தனர். இதன்போது வீட்டில் இரண்டு கிராம் கேரள கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, குறித்த வீட்டை மேலும் சோதனை செய்த போது, துப்பாக்கி ரவைகள் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் சீருடைகளும் கண்டு பிடிக்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டிலிருந்து ரி-56 வகை துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 296 ரவைகள், 12-போர் வகையை சேர்ந்த 27 ரவைகள், எம்-16 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 19 ரவைகள், ரி-56 வகை துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் ரவைகளின் தொகுப்பு, ரி-56 துப்பாக்கிப் பயிற்சிக்கு பயன்படுத்தப்படும் 124 பயிற்சி ரவைகள், 9 மில்லிமீற்றர் தானியங்கி கைத்துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 365 வெற்று ரவைகள் மற்றும் 24 பயன்படுத்தப்பட்ட ரி-56 வெற்று ரவைகள் என்பன மீட்கப்பட்டன.


அவற்றுடன் இராணுவ மற்றும் விசேட அதிரடிப்படை சீருடைகள், அதற்கான பிரத்தியேக பொருள்கள், காலணிகள், கால்சட்டை, தொப்பிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாரின் விசாரணைகளில் வீட்டின் உரிமையாளர் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படை வீரர் என்பதும், அவர் குறித்த பொருள்களை வீட்டில் மறைத்து வைத்திருப்பதும் தெரியவந்துள்ளது.

வீட்டின் உரிமையாளரான சிறப்புப் அதிரடி படை வீரரும், பொலன்னறுவை, ஹிங்குராக்கொடை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு தடுப்புக் காவலில் விசாரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 100

# அங்காடி வியாபாரிகளின் கொட்டகை வவுனியா மாநகர சபையால் அகற்றம்







வவுனியா மாநகர சபையால் பழைய பஸ் நிலையத்திற்கு அருகில் காணப்பட்ட அங்காடி வியாபார கொட்டகை வெள்ளிக்கிழமை அகற்றப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள தனிநாயகம் அடிகளாரின் சிலை அருகே செருப்பு தைக்கும் அங்காடி வியாபார கொட்டகையில், இரவு வேளைகளில் தவறான நடவடிக்கை இடம் பெறுவதாகவும், அதனை சுற்றியுள்ள பகுதிகளை சுகாதார சீர்கேட்டிற்குட்படுவதாக அப்பகுதி வர்த்தகர்கள், பொதுமக்களின் முறைப்பாடுகளிற்கு அமைவாகவே குறித்த கொட்டகை அகற்றப்பட்டதுடன் பிறிதொரு இடம் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்தது.

மேலும் இத்தொழிலில் ஈடுபட்ட விசேட தேவைக்குட்பட்ட பெண்ணிற்கு, விசேட தேவைக்குட்பட்டவர்களை பராமரிக்கும் காப்பகத்தில் இணைப்பதற்கான நடவடிக்கையினை மாநகரசபை வருமான பரிசோதகரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 100



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தூய்மையான குடிநீருக்கான தேடல்

இலங்கையின் வளர்ச்சி குறித்து பேசும் போதெல்லாம் நமக்கு முதலில் நினைவுக்கு வரும் விடயங்கள் – பொருளாதாரம், கல்வி, தொழில்நுட்பம், அரசியல் நிலைப்பாடுகள், வெளிநாட்டு முதலீடுகள். ஆனால், இவை அனைத்துக்கும் அடித்தளமாக இருக்க வேண்டியது, ஒரு சமூகத்தின் அடிப்படை நலன்கள். அந்த அடிப்படையிலேயே தூய்மையான குடிநீரும் ஒன்றாகும். இன்று, இலங்கையின் பல பகுதிகளில் குடிநீர் தொடர்பான சவால்கள் தீவிரமாக அதிகரித்து வருகின்றன. இது வெறும் உடல்நலப் பிரச்சினையாக மட்டுமல்லாது, சமூகநீதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும் அரசியல் பொறுப்புணர்வைச் சோதிக்கும் விடயமாகவும் மாறியுள்ளது.

ஐ.நா.வின் குறிக்கோள்களில் ஒன்றாக 'தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம்' (Clean Water and Sanitation) இடம்பெற்றிருப்பது மட்டுமின்றி, 2030க்குள் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான மற்றும் சுலபமாகக் கிடைக்கும் குடிநீர் வழங்கல் என்பது இலங்கையால் ஏற்கப்பட்ட ஒரு சர்வதேச பாங்கான கடமையாகும். ஆனால் இன்று கிராமப்புறங்களில் மட்டுமன்றி நகரங்களிலும், சுத்திகரிக்கப்படாத நீர்பயன்பாடு ஒரு பெரும் பிரச்சினையாகத் தோன்றுகிறது.

பல்வேறு ஆய்வுகள், குறிப்பாக சமீபத்தில் வெளியான சயன்டிபிக் ரிப்போர்ட் (Scientific Reports) தளத்தில் வந்த ஆய்வு, இலங்கையின் சில மாவட்டங்களில் நீர்த்தொட்டிகளில் உள்ள நைட்ரேட் மற்றும் ஹெவி மெட்டல் (Heavy Metal) அளவுகள், உலக சுகாதார அமைப்பின் (WHO) வழிகாட்டுதல்களைவிட அதிகமாக இருப்பதை வெளிப்படுத்துகின்றன. இது நேரடியாக சிறுநீரக நோய்கள், குழந்தை வளர்ச்சி பாதிப்பு, மற்றும் வயோதிப நோய்கள் வரையிலான தீவிர விளைவுகளுக்கு வழிவகுக்கிறது.

நீரின் தரம் குறைவதற்கான முக்கியக் காரணங்களில் விவசாயத்தில் உரப் பயனீட்டு முறைகள், தவறான வடிகால் திட்டங்கள் மற்றும் தொழில்துறை கழிவுகள் என்பன முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. மத்திய மற்றும் மாகாண நிர்வாகங்கள் இந்த நிலையை தடுக்க தனி முயற்சிகளை மேற்கொண்டாலும், ஒன்றுபட்ட தேசியத் திட்டம் இல்லை என்பது மிகுந்த கவலையளிக்கிறது. குடிநீர் நிர்வாகத்திற்கான ஒருங்கிணைந்த மேற்பார்வை அமைப்பு அல்லது துறை ஒன்று தற்போது தேவையாகவே இருக்கிறது.

மேலும், குடிநீர் விநியோகம் என்பது சுத்திகரித்த நீரை மட்டும் வழங்குவதாக எண்ணப்படக் கூடாது. மக்கள் எடுத்துக்கொள்வதற்கான விழிப்புணர்வு, பள்ளிகல்விக்குள் நீர் பாதுகாப்பு கல்வி, மற்றும் நீர் மேலாண்மை திறன்கள் ஆகியவை ஒன்றாகச் செல்வதே இதற்கான நிரந்தரத் தீர்வாக அமையும்.

இன்றைய சூழலில், ஆளும்தரப்பு கணிம கொடுப்பனவுக்கான "GovPay" போன்ற டிஜிட்டல் சேவைகள் ஆரம்பித்து குடிமக்களுக்கு நவீன வசதிகளை வழங்க முயற்சிக்கிறது. ஆனால் அதேநேரத்தில், ஒரு கிராமத்தில், குழந்தைகள் கிணற்று நீரை கலப்படமில்லாது குடிப்பதற்கு ஏற்ற சூழலைப் பேண வேண்டியதும் அவசியம் என்பதை நாம் மறக்கக்கூடாது. சுதந்திரத்தின் 75 ஆண்டு நிறைவு கொண்டாடும் நாட்டில், ஒரு குடிநீர் குழாய்தான் இன்னும் கனவாக இருக்கக் கூடாது.

தூய்மையான நீர் கிடைக்கும் உரிமை என்பது பொறுப்பற்ற தனிப்பட்ட விடயம் அல்ல. அது சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை தீர்மானிக்கும் அடிப்படைச் சவாலாகும். எனவே, ஆளும்தரப்பு, உள்ளாட்சி நிர்வாகங்கள் மற்றும் குடிமக்கள் அனைவரும் சேர்ந்து நீர் மேலாண்மை பணிகளில் விழிப்புணர்வுடன் ஈடுபடவேண்டும். நாம் இன்று எடுத்த தீர்மானங்களே, நாளைய தலைமுறைக்கு சீரான நீர் வழங்கும் சமூகத்தைக் கட்டமைக்கும்.

# இருளில் மூழ்கிய மத்திய முகாம்சாலை மின் விளக்குகளை சீரமைக்க வலியுறுத்து

(ஹாரீஸ்)

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பின்னர் அதிக சனத்தொகை நடமாட்டமுள்ள வீதிகளில் ஒன்றான மத்திய முகாம் பிரதான வீதிகளில் பொருத்தப்பட்டிருக்கும் மின் விளக்குகள் திடீரென்று நிறுத்தப்பட்டதையடுத்து வீதிகளில் போக்குவரத்து செய்யும் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



கடந்த சில வாரங்களாக வீதிகளில் பொருத்தப்பட்டிருக்கும் மின் விளக்குகள் எரியாமையால் வீதிகள் இருளில் மூழ்கி காணப்படுகின்றது. இதற்கு காரணம் சிலரின் நாசகார செயல்கள் எனவும், இச்செயல்களால் வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் அதிக விபத்துக்களை சந்திக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் வீதிகளில் அங்கும் இங்கும் பல கட்டாக்காலி மாடுகள் மற்றும் தெரு நாய்களில் சிக்குண்டு பல விபத்துக்கள் இடம்பெறக்கூடிய சந்தர்ப்பங்களும் அதிகம் அதிகம் காணப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு பொதுமக்கள் சிலர் நாவிதன்வெளி பிரதேச சபை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு நாவிதன்வெளி பிரதேச சபை அதிகாரிகள் துரிதகதியில் கவனம் செலுத்தி வீதிகளின் மின் விளக்குகளை மக்கள் பாவனைக்கு உகந்த வகையில் திருத்தி அமைத்து தருமாறும் மேலும் இது போன்ற அசம்பாவிதங்களுக்கு இடமளிக்கக் கூடாது எனவும் பொதுமக்கள் வலியுறுத்தி கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மகிழவெட்டுவான் பாலம் உடைந்து; 2 வருடங்களாகியும் திருத்தவில்லை

## பொதுமக்கள் கடும் சிரமம்

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குள் அமைந்துள்ள மகிழவெட்டுவான் பாலம் 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் உடைந்து வீழ்ந்ததையடுத்து, இரண்டாண்டுகளாக மட்டக்களப்புக்கும் மகிழவெட்டுவான், நரிப்புதோட்டம், நெல்லூர் மற்றும் கல்குடா பகுதிகளுக்கும் இடையிலான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.



இதனால், பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், தற்போது அப்பகுதிகளில் வசிக்கும் சுமார் 3,000 குடும்பங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

உடைந்த பாலம் வரை மாத்திரமே பொதுப்போக்குவரத்து பஸ்கள் பயணிக்கின்றன. இதனால், மக்கள் பாலத்தை கடந்து, பின்னர் சுமார் 2 கிலோமீற்றர் தூரம் வெய்யிலும், மழையிலும் நடந்து செல்லவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், மக்கள் வவுணதீவு மற்றும் ஆயித்தியமலை ஊடாக சுமார் 20 கிலோமீற்றர் சுற்றி பயணிக்க வேண்டியுள்ளது. இதேவேளை, 35 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக பாலமும் வெள்ளத்தால் உடைந்துள்ள நிலையில், அதனூடாகவும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆசிரியர்கள் உரிய நேரத்தில் பணிக்கு செல்ல முடியாததால், அரை நாள் விடுப்பு பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பாடசாலை முடிந்த பின்னரும் பஸ் கிடைக்காததால், மாற்று போக்குவரத்துக்காக பலர் சைக்கிள்கள் அல்லது நடையாக பயணிக்க வேண்டியுள்ளது.

இரண்டு ஆண்டுகளாக இந்த விவகாரம் தொடர்ந்தும் இருந்தும், இதுவரை எந்தவொரு அரசியல்வாதிகளோ, அரசியல் கட்சிகளோ அல்லது அரச அதிகாரிகளோ உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதையும், தேர்தல் காலங்களில் மட்டும் வாக்கு கேட்டு வந்த அரசியல்வாதிகள் தற்போது பாராமுகமாக இருக்கின்றனர் எனவும் பொதுமக்கள் கடும் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

அரச அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட மக்களின் போக்குவரத்து பிரச்சினையை தீர்க்க வேண்டுமெனவும், பாலத்தை மீள்நிர்மாணம் செய்யுமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



# 3 பிள்ளைகளின் தந்தை மின்சாரம் தாக்கிச் சாவு

யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் பயிற்றங் கொடி நடுவதற்காக தடியை வெட்டிய குடும்பஸ்தர்ஒருவர்மின்சாரம்தாக்கி வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மின்சார நிலைய வீதி, சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த 48 வயதுடைய மூன்று பெண்பிள்ளைகளின்தந்தையாவார்.

குடுப்பஸ்தர் வெள்ளி பிற்பகல் பழைய பொலிஸ் நிலைய வீதி சுன்னாகம் தெற்கு பகுதியில் உள்ள வீட்டு வேலியில் பயிற்றங் கொடி நடுவதற்காக தடியை வெட்டியுள்ளார்.

இதன்போது நீண்டு வளர்ந்திருந்த தடி மின்சார கம்பி மீது தொடுகை ஏற்பட்டு அவர் மீது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். வீதியால் சென்றவர்கள் மூலமே இந்த விடயம் வீட்டாருக்கு தெரிய வந்துள்ளது.

சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டு சம்பவ இடத்தையும் பார்வையிட்டார்.

சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர். பிரேத பரிசோதனையில் கடுமையாக மின்சாரம் தாக்கி உயிரிழப்பு ஏற்பட்டதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அப் பகுதியில் மின்சார கம்பிகள்காணப்படுகின்றபோதிலும் நீண்டு வளர்ந்திருந்திருக்கும் மரங்களை மின்சார சபையினர் வெட்டாமையலேயே இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுவதாக பிரதேச பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.



# மட்டக்களப்பில் இருந்து காலி சென்ற பஸ் விபத்து

## ஒருவர் இறப்பு, 12 பேர் காயம்

கொழும்பு - வெல்லவாய வீதியில் சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 12 பேர் காயமடைந்துள்ளனர் என தங்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் தங்காலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து காலி நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ், முன்னால் சென்ற லொறியின் பின்புறத்தில் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தங்காலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளானபஸ்ஸில்பயணித்த சாரதி உட்பட 13 பேர் காயமடைந்து தங்காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், படுகாயமடைந்த பயணி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லையென்பதுடன் சடலம் தங்காலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து சம்பவம் குறித்து தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# கனடாவில் அடுத்த தமிழின அழிப்பு நினைவுத்தூபி அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது!

கனடாவின் ஸ்காபொரோவில் தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபியை அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கவுன்சிலர் பார்த்தி கந்தவேள் முன்மொழிந்த தீர்மானமே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

# ஆயுர்வேத மருத்துவ முகாம்

(அபு அலா)

கிழக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களத்தின் அனுசரணையுடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வழிகாட்டலின் கீழ், நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச ஆயுர்வேத வைத்திய முகாம் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

நிந்தவூர் ஜும்மா பெரிய பள்ளிவாயலின் முன்பாக இடம்பெற்ற இந்த வைத்திய முகாம் 'ஆயுர்வேத, யூனானிவைத்தியவாழ்க்கைமுறையூடாக நீரிழிவு நோயற்ற நாட்டை கட்டி எழுப்புவோம்'எனும்தொனிப்பொருளில் இடம்பெற்றது.







இதில் மிக அதிகளவான நோயாளர்கள் வருகை தந்து வைத்திய ஆலோசனையை பெற்றுக்கொண்டதுடன் அவர்களின் இரத்தம் மற்றும் குருதி அமுக்க பரிசோதனையையும் இலவசமாகப் பெற்றுக்கொண்டதுடன் உடல்வலி, உடற்பருமன், தோல் நோய்கள், நீரிழிவு, இரத்த அழுத்தம் பெண்கள் தொடர்பான நோய்கள், பக்கவாதம் போன்ற பல்வேறுபட்ட நோய்களுக்கானவைத்திய ஆலோசனை மற்றும் மருந்துகளையும் இலவசமாக பெற்றுக்கொண்டனர்.

இந்த மாபெரும் இலவச மருத்துவ முகாமில் கிழக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் யூ.எல்.நிஹாயா, நிந்தவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட வைத்திய குழுவினர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் பங்கேற்றமையும், அங்கு வருகை தந்த அனைவருக்கும் மூலிகை இலைக் கஞ்சி வழங்கிவைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




# திருமலையில் நடைபெறும் தமிழ்ச் சங்கப் பெருவிழா

## தொன்மை மிகு பொருள்களை தந்துதவுமாறு கோரிக்கை

(ஹஸ்பர்)

திருகோணமலை தமிழ் சங்கத்தினால் 2025 .06 .10 ஆம் திகதி அன்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள வசந்தப் பெருவிழாவில் நூற்கண்காட்சிக்காக திருகோணமலை சம்பந்தமான கல்வெட்டு ஆவணங்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் ஆய்வு நூல்கள் உள்நாட்டிலும், புலம் பெயர் தேசங்களிலும் வெளியீடு செய்யப்பட்ட இலக்கிய நூல்கள் வைத்திருப்போர் அவற்றைத் தந்துதவினால் மேற்படி கண்காட்சியை சிறப்பாக நடத்துவதற்குப் பேருதவியாக அமையும்.

பெற்றுக் கொள்ளும் சகல ஆவணங்களும் மீண்டும் ஒப்படைக்கப்படும் என்பதை கூறிக் கொள்கின்றோம்.இது சம்பந்தமாக தொடர்பு கொள்வதற்கு திருமதி மர்ளியா சக்காப் தொலைபேசி இலக்கம் 0760691051, ந. யோகேஸ்வரன் - நூலகர் திருகோணமலை தொலைபேசி இலக்கம்- 0703827660, திருமதி .பானு சுதாகர் , திருகோணமலை தொலைபேசி இலக்கம் -0773556563

# மகா கும்பாபிஷேக இயந்திர பூசை

மூதூர் கிழக்கு சேனையூர் வர்ணகுல விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்திற்கான இயந்திர பூசை வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.





# நேற்று 24 ஆவது நாளில் வாகரையில் யாழ். - கதிர்காம பாதயாத்திரீகர்கள்

(சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட யாழ் கதிர்காமம் பாதயாத்திரீகர்கள் நேற்று சனிக்கிழமை 24 ஆவது நாளில் 04 மாவட்டங்களை கடந்து மட்டு.மாவட்டத்திலுள்ள வாகரையை அடைந்தனர்..

யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த மே மாதம் முதலாம் திகதி புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் 23தினங்களில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு திருகோணமலை ஆகியநான்கு மாவட்டங்களைக்கடந்துதற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரவேசித்துள்ளனர்.

வெருகல் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் வெள்ளி பூஜையில் கலந்து கொண்ட குழுவினர் நேற்று வாகரையை அடைந்தனர்.

இன்று(ஞாயிற்றுக்கிழமை)வாழைச்சேனைகறுவாக்கேணியை வந்தடைவர்.

மழை வெயிலுக்கு மத்தியில் சுமார் 78 அடியார்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

எதிர்வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி கதிர்காமத்தை சென்றடைவர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# இறக்காமத்துக்கு தனியான நீதிமன்றம் ஒன்று வேண்டும்

## அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை நாடாளுமன்றில் கோரிக்கை

(கே எ ஹமீட்)



இறக்காமத்திற்கான தனியான நீதிமன்றத்தை உருவாக்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை(திருத்தம்) சட்டமூல குழு விவாதம் வியாழக்கிழமை நடைபெற்றது. இக்குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தனது உரையில் -

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இறக்காமப் பிரதேசத்தில் சுமார் 18000 மக்கள் வாழ்கின்றனர். இதில் 94வீதமான சுமார் 17000 இற்கும் மேற்பட்ட மக்கள்தமிழைதாய்மொழியாகக் கொண்டுள்ளனர்.

12 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதான இறக்காமப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசமானது 2012 ஆம் ஆண்டு வரை அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தின் கீழ் காணப்பட்டதோடு பின்னர் அது அம்பாறை நீதி நிர்வாக வலயத்தின் கீழ் எவ்வித அறிவித்தலும் இன்றி மாற்றப்பட்டு இருந்தது சிங்கள மொழியை நீதிமன்ற மொழியாக கொண்ட அம்பாறை நீதி நிர்வாக வலயத்தின் கீழ் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட இறக்காமப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரதேசம் இணைக்கப்பட்டமையானது அப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களது அடிப்படை உரிமையை மீறுகின்ற ஒரு செயலாகும்.

அத்தோடு இப் பிரதேசத்தில் வாழ்கின்ற 94 வீதமான தமிழ் பேசும் மக்கள் அம்பாறை நீதிமன்றங்களில் தமது வழக்கு நடவடிக்கைகளை தமக்கு பரீட்சயமற்ற சிங்கள மொழியில் தாக்கல் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் அத்தோடு வழக்கு நடவடிக்கைகளை கையாள்வதிலும் சிரமப்படுகின்றனர்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தமிழில் இருந்து சிங்களத்துக்கும் சிங்களத்திலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்ப்பு செய்வதற்காக வழக்குச் செலவுக்கு மேலதிகமாக பெருந்தொகையான பணத்தை செலவிட வேண்டியதுர்ப்பாக்கியநிலைஏற்பட்டுள்ளது. அத்தோடு வழக்கு நடவடிக்கைகளின் போதும் சாட்சியங்களின் போதும் நீதிமன்றின் பெறுமதியான நேரத்தை மொழிபெயர்ப்புக்காக செலவிட வேண்டிய துரதிஷ்டவசமான நிலையும் ஏற்பட்டுள்ளது.

இறக்காமப் பிரதேசமானது புவியியல் ரீதியாக சிங்கள மொழியை நீதிமன்ற மொழியாககொண்ட அம்பாறைநீதிநிர்வாக வலயத்திற்கும் தமிழ் மொழியை நீதிமன்ற மொழியாக கொண்ட அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்திற்கும் இடையில் அமையப் பெற்ற பிரதேசமாகும்.

சிங்கள மொழியிலான அம்பாறை நீதி நிர்வாக வலயத்தினுள் இக்கினியாகல, உகன, தமன, மங்கலகம, மத்தியமுகாம், பக்கியல்ல மற்றும் அம்பாறை ஆகிய போலிஸ் பிரிவுகள் அடங்குகின்றன. இதில் ஒரே ஒரு தமிழ் பேசுகின்ற மக்களை கொண்ட இறக்காமப் பிரதேசமானது பொருத்தமற்ற வகையில் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியிலான அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தினுள் அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் ஆகிய பொலிஸ் பிரிவுகள் மாத்திரம் உள்ளடங்குகின்றன.

எனவே தான் தமிழ் பேசுகின்ற மக்களை கொண்ட இறக்காமப் பிரதேசமானது தமிழ் மொழியை நீதிமன்ற மொழியாக கொண்ட அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். அல்லது இறக்காமப் பிரதேசத்திற்கான தனியான நீதிமன்றம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை நீதி அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

இதுதொடர்பில்மேல்நீதிமன்றம் உள்ளடங்களாக நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில்நீதிமன்றநியாயாதிக்க எல்லைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் 2021 ஆம் ஆண்டு விதந்துரைக்கப்பட்ட அறிக்கையில் மேற்சொல்லப்பட்ட இறக்காமப் பிரதேசமானது அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தின் கீழ் கொண்டுவரப்படுவது தொடர்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

# பாலமுனை பாரூக்குக்கு பாராட்டு விழா நிகழ்வு

(நவாஸ்)

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய (திருச்சி) 2025 மகாநாட்டில் இலக்கியச் சுடர் விருது கவிஞர் காரை இறையடியான் நினைவாக பேராசிரியர் மு. இ. அஹமது மரைக்காயர், பேராசிரியர் ஓ. நசீமா பானு ஆகியோர் வழங்கிய பொற்கிழியும் ( இந்தியா ரூ.20,000.00) பெற்று இப்பிரதேச மண்ணுக்கு பெருமை சேர்த்த பாலமுனை பாவேந்தல் பாறூக் அவர்களை பாராட்டும் பெருவிழா இன்று (ஞாயிற்றுக்கிழமை) மு.ப .09.00 மணிக்கு அட்டாளைச்சேனை பிரதேச கேட்போர் கூடத்தில் செயலாளர் யூஊ.அஹமட் அப்கர் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதன் பிரதம அதிதியாக மேல் நீதிமன்ற நீதிபதி (திருகோணமலை) என்.எம்.அப்துல்லாஹ் மற்றும் கௌரவ அதிதிகளாக பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், விரிவுரையாளர் எம். அப்துல் றசாக் மற்றும் சிறப்பு அதிதிகள் மற்றும் முன்னிலை அதிதிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், துறைசார்ந்த கலைஞர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

## போலிக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அதிகளவான ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் மாறுப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கான ஆணை தேசிய மக்கள் சக்திக்கு உண்டு. சகல எதிர்க்கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் இணைத்துக் கொண்டு கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி பல்வேறு வகையான முயற்சிகளை மேற்கொள்கிறது.

கொழும்பு மாநகர சபையை யார் கைப்பற்றுவது என்பதை நாட்டு மக்கள் இன்னும் ஒருவாரத்தில் தெரிந்துக்கொள்ளலாம். பெரும்பான்மை பலத்துடன் நாங்களே ஆட்சியமைப்போம்.

சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து ஆளும்தரப்புக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன. இவ்வாறான கருத்துக்களினால் இந்த ஆட்சியை வீழ்த்த முடியாது என்பதை எதிர்க்கட்சிகள் வெகுவிரைவில் தெரிந்துக் கொள்ளலாம் என்றார்.

## வரி விதிப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணையவழி கலந்துரையாடல்கள் மூலம் இந்த நேரடி சந்திப்பிற்குத் தேவையான பின்னணி உருவாக்கப்பட்டதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இது பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கான இரு நாடுகளினதும் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது என்றும் கூறப்பட்டது.

தற்போதைய பொருளாதார முன்னுரிமைகளைக் கருத்தில் கொண்டு வர்த்தகஒத்துழைப்பைமேம்படுத்துவதற்கான புதிய வழிகளை ஆராய்தல் மற்றும் இலங்கைக்கு நன்மை பயக்கும் பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளல் இந்தக் கலந்துரையாடல்கள் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பயணத்திற்கு முன்னதாக நாட்டின் நலன்கள் நன்கு பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் வெள்ளிக்கிழமை ஜனாதிபதிசெயலகத்தில் உயர்மட்ட அதிகாரிகள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பேச்சுக்களில் நல்ல பயன்களை எட்டுவதற்கு கவனம் செலுத்த வேண்டிய பொருளாதார உத்திகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிறிவர்தன வர்த்தக வாணிப உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் விமலேந்திரராஜா ஜனாதிபதியின் சிரேஸ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவசுட்டமாஅதிபர்திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்திநிர்மால்விக்னேஷ்வரன் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி தர்ஷன பெரேரா ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

## அரச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் வெள்ளிக்கிழமை பிற்பகல் கொழும்பு நாரஹேன்பிட்டியவில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது 40 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றுக்கொண்டமை தொடர்பில் அந்த திணைக்களத்தின் அதிகாரிகள் மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த சுற்றிவளைப்பு தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் செய்தியாளர்களிடம் பேசியபோது தெரிவித்ததாவது:

எமக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய சுற்றிவளைப்பு, பிடியாணை உத்தரவுடன் நாரஹேன்பிட்டி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 41 இலட்சத்து 17 ஆயிரத்து 340 ரூபா பணம் மீட்கப்பட்டது.

வாகன உரிமை மாற்றும் பிரிவின் பிரதி ஆணையாளரின் அலுவலகத்தில் இருந்து மீட்கப்பட்ட குறித்த பணம் தொடர்பில் அவர்களால் தெளிவுபடுத்த முடியாமையால் அவை இலஞ்சத்தின் ஊடாக பெற்றுக்கொண்டதாக கருதப்பட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பெரும்பாலன அதிகாரிகள் இலஞ்சம் கோருகின்ற நிலையில் குறித்த நிதி அவர்களிடத்தில் பகிரப்படுகிறது.

இதற்கமைய இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் அந்தத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் உள்ளிட்ட மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

எமக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த திணைக்களத்தில் மாத்திரமல்லாமல் பல அரச திணைக்களங்களில் இலஞ்சம் மற்றும் ஊழல் அதிகரித்துள்ளதாக எமக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறான அரச அதிகாரிகளிடம் ஒன்றைக்கூற வேண்டும். இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு உங்கள் விடயத்தில் அவதானமாக உள்ளது. இலஞ்சம் கொடுத்தல் மற்றும் இலஞ்சத்தை பெறுதல் பாரதூரமான தவறு என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அவதானத்துடன் உள்ளது என்றார்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கமைய தமது தேர்தல் பரப்புரைக்கான செலவின் விவரங்களை வேறுவேறாகத் தயாரித்து மே 27, செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளூர் அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஒப்படைக்க வேண்டும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இணைய இடையிணைப்பியிலும் பிரவேசித்து பதிவுசெய்து கொண்ட பின்னர் அந்த இணையதளத்திற்கு தமது தேர்தல் விவரத் திரட்டுக்களைப் பதிவேற்றம் செய்யக்கூடிய வகையில் உரியவசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அதேபோல் இக்காலத்துள் அவற்றை ஒப்படைக்க முடியாதிருப்பின், மே 27க்கு முன்னர் வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் குழுக்களின் தலைவர்கள் போட்டியிட்ட உள்ளூர் அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைப்பதற்கும் வாய்ப்புள்ளது.

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கமைய மே 27 நள்ளிரவு 12 மணி அல்லது அதற்கு முன்னர் தேர்தல் விவரத்திரட்டுக்களை ஒப்படைக்காதிருப்பதன் ஊடாக சட்டவிரோதமான செயலொன்றைப் புரிந்தவராகக் கருதி சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## அடுத்தடுத்துப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவுபடுத் தவுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் 18 இம்தியாஸ் பாகீர் மாக்கார் ஐக்கிய மக்கள் சக்தியின் சகல பதவிகளிலும் இருந்தும் விலகுகிறார் என அறிவித்திருந்தார். கட்சியின் மறுசீரமைப்பு மற்றும் எதிர்காலம் தொடர்பில் தன்னால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தலைமைத்துவத்தினால் கரிசனை கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்து அவர் இந்த தீர்மானத்தை எடுத்திருந்தார்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பதுளை மாவட்ட தலைவரும் இப்பண்டாரவளை தொகுதி அமைப்பாளருமான சமிந்த விஜேசிறி அப்பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். அவரது பதவி விலகல் கட்சி தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டுள்ளார். எவ்வாறிருப்பினும் கட்சிக்குள் சில முரண்பாடுகள், அதிருப்திகள் காணப்படுவதாலேயே அவரால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இதேவேளை தேர்தலுக்கு முன்னதாகவே கட்சியின் முன்னாள் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அவரைத் தொடர்ந்து சம்பிக ரணவக்க உள்ளிட்டோரும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகினர். தற்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஐக்கிய மக்கள் சக்தியை பகிரங்கமாக விமர்சித்து வருவதோடு, தமது ஆதரவு குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## மாகாணத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனால் குறித்த தனிநபர் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறித்த சட்டமூலத்தில் 2025ஆம் ஆண்டின் மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம் என்று எடுத்துக்காட்டப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, 2017ஆம் ஆண்டு செப்டெம்பர் 21 வலுவலிருந்த 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தினால் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எவ்வாறிருப்பினும் 2017 செப்டெம்பர் 22 நடைமுறைக்குவருகின்றதிகதிவரைக்குமான காலப்பகுதியின்போது செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்குப் பங்கமின்றி அத்தகைய செயல் 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இச்சட்டம் வலுவுக்குவருகின்ற திகதியிலிருந்து பயனுறுவதாக நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர்
Kalaikkathir

# நல்லூர் ஆலயசூழலில் அமைக்கப்பட்ட அசைவ உணவகத்தை மூடவேண்டும்

## வடக்கு ஆளுநரிடம் சைவ அமைப்புகள் வேண்டுகோள்



நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சூழலில் எந்தவொரு அனுமதியும் இல்லாமல் அமைக்கப்பட்டுள்ள பன்னாட்டு நிறுவனத்துக்கு எதிராக அதனை மூடுவதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும், சட்டவிரோத உணவகம் அமைக்கப்படுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்காத யாழ். மாநகர சபையின் செயற்பாடு தொடர்பில் விசாரணைக் குழு அமைக்குமாறும் நல்லை சிவகுரு ஆதீனம் தவத்திரு வேலன் சுவாமிகள் தலைமையில் யாழ்ப்பாணத்தை தலைமையகமாக கொண்டு இயங்கும் அகில இலங்கை சைவ அர்ச்சகர் சபை, சைவ பரிபாலன சபை, அகில இலங்கை சைவ மகா சபை, சைவ வித்யா விருத்தி சங்கம், இலங்கை சைவசமய பேரவை உட்பட அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் யாழ் பல்கலைக்கழக இந்துகற்கைகள் பேராசிரியர், திருக்கேதீச்சரம் அறங்காவலர் ஆகியோர் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தி மனுவைக் கையளித்தனர்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும் தமிழ்ச் சைவப்பேரவையினருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

முதல் கட்டமாக யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட நல்லூர் ஆலயச் சுற்றாடலில் மதுபான கேளிக்கை வர்த்தக நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படக் கூடாது எனவும் அதை சிவபுண்ணிய பிரதேசமாக மாநகர சபை வர்த்தமானி ஊடாக அறிவிப்பதற்கு ஏதுவான நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரினர்.

இதையே ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் பின்பற்றி தமது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள ஆலய நிர்வாகங்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பதற்குரிய அறிவுறுத்தல்களையும் வழங்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

மேலும் மேற்படி உணவகம் பன்னாட்டு நிறுவனம்என்றஅடிப்படையில்இலங்கையின் சட்டம் தொடர்பாக முழுமையாக அறிந்து வைத்திருப்பார்கள் எனவும், அவர்கள் நல்லூரில் தமது நிறுவனத்தின் கிளையை எந்தவொரு அனுமதியையும் பெற்றுக்கொள்ளாது திறந்தமை திட்டமிட்ட நடவடிக்கை எனவும் சுட்டிக்காட்டிய தமிழ்ச் சைவப்பேரவையினர், இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் அலுவலர்களுக்கு தொடர்பு உள்ளதா என்பது தொடர்பாகவும், அனுமதியற்ற வர்த்தக நிறுவனத்துக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பிலும் விசாரணைக்குழு அமைத்து விசாரணை முன்னெடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

இளைய சமூகத்தை வழிப்படுத்தும் வகையில் அறநெறிக் கல்வியை கட்டாயமாக்குவதற்கான யோசனைதொடர்பிலும்தமிழ்ச்சைவப்பேரவையினர் சுட்டிக்காட்டினர். குறிப்பாக, 14 வயதுக்கு உட்பட்டோருக்கான அனைத்து தனியார் கல்வி செயற்பாடுகளையும் வெள்ளி மாலையும், ஞாயிறு மதியம் வரையிலும் மூடுவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வர்த்தமானி மூலம் அறிவித்தல் விடுத்து நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரினர்.

அத்துடன் அறநெறி வகுப்புக்கு மாணவர்கள் செல்வதை உறுதிப்படுத்தி ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களின் அறநெறி வகுப்புக்கான வருகை மற்றும் செயற்பாடுகளை கட்டாயக் கல்வியின் ஒரு பகுதியாக இணைத்துக்கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

சில பாடசாலைகளில் மாணவர்களை சைவச் சின்னங்கள் அணிந்து செல்வதை தடைவிதிக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என ஆதாரங்களுடன் தமிழ்ச் சைவப்பேரவையினர் ஆளுநரிடம் முறையிட்டனர்.

தமிழ்ச் சைவப் பேரவையினரின் கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# அதிபர், ஆசிரியர் மீது வாள்வெட்டு

மட்டக்களப்பு, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள ஆலையடிவேம்பு பிரதேசத்தில் ஆசிரியர் மற்றும் அதிபர் ஆகியோர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் விசேட பயிற்சி செயலமர்வு தொடர்பாக பாடசாலை மாணவி ஒருவருக்கு அறிவிப்பதற்காக அவரது வீட்டுக்குச் சென்ற ஆசிரியர் மற்றும் அதிபரே இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர்.

வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்ட நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள பாடசாலையில் கல்வி கற்றுவரும் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கு விசேட பயிற்சி செயலமர்வு ஒன்று தம்பட்டை பிரதேசத்தில் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

விசேட பயிற்சி செயலமர்வுக்கு செல்வதற்கு மாணவர்களை ஸ்ரீஇராமகிருஷ்ணா தேசிய பாடசாலைக்கு முன்னால் ஒன்றுகூடுமாறு, அதிபரின் உத்தரவுக்கமைய மாணவர்களின் வீட்டிற்கு சென்று அறிவிப்பதற்காக சம்பவதினம் குறித்த ஆசிரியர் மாணவி ஒருவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

இந்தநிலையில் குறித்த மாணவிக்கு அறிவித்துவிட்டு அங்கிருந்து வெளியேற முற்பட்ட ஆசிரியரை மாணவியின் சகோதரன் வாளால் வெட்டி தாக்கியதுடன் மோட்டார் சைக்கிளை அடித்து உடைத்துள்ளார்.

ஆசிரியர் தனக்கு நேர்ந்த கதியை அதிபருக்கு தெரிவித்ததையடுத்து அதிபர் அங்கு சென்று ஆசிரியரை காப்பாற்ற முற்பட்டபோது அவர் மீதும் மாணவியின் சகோதரன் வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவரது மோட்டார் சைக்கிளையும் அடித்து உடைத்துள்ளார்.

இதனையடுத்து வாள்வெட்டு தாக்குதலில் படுகாயமடைந்த ஆசிரியர், அதிபர் ஆகிய இருவரும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டவரை கைது செய்துள்ளதாகவும் அவர் மதுபோதையில் இருந்துள்ளார் எனவும் குறித்த நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஏறாவூரில் இடம்பெற்ற விபத்தில் பாதசாரி சாவு; விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பியோட்டம்

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னக்குடா வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்து நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

ஏறாவூர் - புன்னக்குடா வீதியின் 2 ஆவது கிலோமீற்றர் மைல் கல்லுக்கு அருகில் வாகனம் ஒன்று, பாதசாரி ஒருவர் மீது மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்தகாயமடைந்த பாதசாரி, மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.



உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்கு காரணமான வாகனம் தொடர்பான தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

சம்பவ இடத்தில் இருந்த சிசிடிவி காட்சிகள் மூலம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ஏறாவூர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.05.2025இல் வெளியிடப்பெற்றது